

2023

செயலாற்றுகை அறிக்கை

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு

செலவினத் தலைப்பு இல. 243

உள்ளடக்கம்

அத்தியாயம் **பக்க இலக்கம்**

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு 3

1.1 அறிமுகம்: 3

1.2 நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள் 4

1.3 பிரதான தொழிற்பாடுகள் 4

1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவு 7

1.5 திணைக்களத்தின் கீழ் வரும் நிதி உதவிகள் 7

1.6 வெளிநாட்டு நிதியுதவியின் கீழான கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் 7

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் 8

2.1 மேன்நோக்கு 8

2.2 சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான தொடர் கடன் கருத்திட்டத்தின் (SMELOC) முன்னேற்றம் 8

2.3 பண மாணியமாக உர மானிம் வழங்குதல் 9

2.4 நுண் நிதித் தொழில்துறைக்கான விரிவான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை நிறுவுதல் 9

2.5 உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் 9

2.6 2022 /2023 பெரும் போகத்தில் அரச நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்குதல் 9

2.7 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலைகளுக்கு நெல் கொள்முதல் செய்ய உறுதிமொழிக் கடன் திட்டத்தை செயல்படுத்துதல். 10

2.8 ஐக்கிய அமெரிக்க டொலர் 1,000 மில்லியன் இந்தியக் கடன் திட்டம் 11

2.9 தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் 12

அத்தியாயம் 03 – 2023.12.31ஆம் ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை 13

3.1 நிதி செயலாற்றுகைக் கூற்று 13

3.2 நிதி நிலைமைக் கூற்று 14

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 15

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள் 16

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 17

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 17

3.7. நி.பி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக மாவட்ட செயலக செலவினத்திற்கான ஒதுகீடு 17

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை. 18

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 18

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்.....19

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)19

அத்தியாயம 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை 20

5.1 மேன்நோக்கு.....20

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள்கள் மற்றும் சவால்கள.....20

அத்தியாயம் 06 – மனித வள விபரம்.....29

6.1 பதவியணி முகாமைத்துவம்.....29

6.2 மனிதவளத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை நிறுவனத்தின் செயல்திறனில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.....29

6.3 மனிதவள அபிவிருத்தி.....29

6.3.1 உள்நாட்டு பயிற்சி.....29

6.3.2 வெளிநாட்டு பயிற்சி.....31

அத்தியாயம் 07 – இணக்காப்பாட்டு அறிக்கை 32

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்:

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக கிடைத்த (GDP) கனிசமானளவிலான பங்களிப்பினை கருத்தில் கொண்டு, நிதியளித்தல், சந்தைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பிலான அனுகலினை மேம்படுத்துவதன் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கு வசதியளிப்பதற்காகவும் பலப்படுத்தலுக்காகவும் 2005 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிதித் திணைக்களமானது திறைசேரியினது திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் வளர்ச்சிக்கான பொருத்தமான கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுப்பதே இத்திணைக்களத்தின் முக்கிய பணியாகும். பின்னர், தேசியக் கொள்கையின்படி, வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வறுமை ஒழிப்பிற்கான உந்து சக்தியாக இருக்கும் நுன் தொழில்முயற்சிகளைச் சேர்ப்பதன் மூலம் துறையின் நோக்கம் விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி, திணைக்கள செயல்பாடுகள் இரண்டு தூண்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன, அதாவது நிதியியல் தீர்வுகள் மற்றும் சந்தை அணுகல் மற்றும் மேம்பாடு.

1.1.1 நிதியியற் தீர்வுகள்

வளர்ந்து வரும் ஏனைய பொருளாதாரங்களைப் போன்று, இலங்கையின் மிகப்பெரிய பொருளாதாரத் துறையானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையாகும். மேலும் இத்துறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீதமாகவும், வேலைவாய்ப்பில் 45 சதவீதமாகவும் மற்றும் ஏற்றுமதியில் 20 சதவீதமாகவும் பங்களிப்பினை வழங்குகிறது. எனவே, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையை விரிவுபடுத்துவதானது நாடு தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவும், ஏற்றுமதி பல்வகைப்படுத்தலை ஊக்குவிக்கவும், பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், பின்தங்கிய சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உதவியாக அமையும். எவ்வாறாயினும், கடந்த சில வருடங்களாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார மந்தநிலை போன்ற மூவகை தாக்கங்களை வணிகங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்ததால், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை மிகவும் பாதிக்கப்படக்கூடிய துறையாக மாறியது. அத்துடன் அவை இன்னும் சந்தையில் நிலைத்து நிற்கவும் தங்கள் வணிகங்களைத் தக்கவைக்கவும் போராடுகின்றன. அத்துடன் நுண்கடன் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் கருவிகளில் ஒன்றாகும். மேலும் இது குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிதிச் சேவைகளை வழங்குவதிலும், பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தீவிர பங்களிப்பைப் வழங்குவதிலும் முக்கிய பங்குவகிக்கும் அதேவேளை நிதிக்கான அணுகல் மற்றும் வறுமை மட்டத்தினைக் குறைப்பதற்கான அவற்றின் திறனையும் அதிகரிக்கிறது. கட்டுப்பாடற்ற நுண் நிதி நிறுவனங்கள் கணிசமான எண்ணிக்கையில் இருப்பதால், பாதிக்கப்படக்கூடிய குறைந்த வருமானம் உடையவர்களை கடன் பொறியிலிருந்து பாதுகாப்பதற்காக இலங்கையில் காணப்படும் ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டங்களை இயற்றுவது அவசரத் தேவையாக உள்ளது.

நுண்நிதித்துறையை ஒழுங்குபடுத்துவதற்கான பொறிமுறையை செயல்படுத்துவதற்கும் நிதியினை அணுகுவதற்கும் இக்துறையை எளிதாக்குவது அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பிரகடனத்தின் கீழ் வருவதால், இந்தத் திணைக்களம் கொள்கைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதிலும், நிதி மற்றும் நிதியல்லாத திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. அதேபோல் நுண், சிறிய மற்றும் நடுத்தர

தொழில்முயற்சிகளுக்கு (எம்எஸ்எம்இ) வசதியளிப்பதற்கும், குறைந்த வருமானம் பெறும் சமூகங்களை நிதிச் சுரண்டலில் இருந்து பாதுகாப்பதற்குத் தேவையான ஒழுங்குமுறை வழிமுறைகளைச் செயல்படுத்தி, நாட்டின் நிதி அமைப்பின் மீது நம்பிக்கையை வளர்ப்பதற்கும் நிதி தொடர்பான திட்டங்களினை நடைமுறைப்படுத்துகிறது.

1.1.2 சந்தை அணுகல் மற்றும் அபிவிருத்தி

உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை உறுதி செய்யும் அதே வேளையில், சந்தை விலையினை ஸ்திரப்படுத்துவதற்காக சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் பிற சந்தை காரணிகளில் அக்கறை செலுத்தி, அதிகப்படியான பயிர் அறுவடைகளை நிர்வகித்தல் மற்றும் கேள்வி மற்றும் நிரம்பல் பக்க ஏற்றத்தாழ்வுகளை சமநிலைப்படுத்துவது முக்கியமானதாகும். மேலும், நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது அவசியமாகும். எனவே, உத்தரவாத விலையில் நெல் கொள்முதல் செய்தல், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு ஆதரவளித்தல், சலுகைக் கடன்கள், திறைசேரி உத்தரவு பத்திரங்கள், களஞ்சிய வசதிகள் மற்றும் தொழில்நுட்ப உதவி போன்ற அரச சலுகைகள் இத்திணைக்களத்தின் தலையீட்டின் கீழ் வழங்கப்படுகிறது. இத்தகைய ஊக்குவிப்புக்கள் விவசாயிகள் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முனைவோரை ஊக்குவிப்பதோடு குறைந்த வருமானம் கொண்ட மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை பராமரிக்க உதவும் அதே வேளையில் பொருளாதார மேம்பாட்டு செயல்முறைக்கு பங்களிக்கும் திறன் கொண்ட புதிய தொழில்முனைவோரையும் அங்கீகரிக்கிறது.

1.2 நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

1.2.1 தூர நோக்கு :

"அபிவிருத்தி நிதிக்கு தேவையான வசதிகளை வழங்கும் பிரதான அரச முகவராதல்"

1.2.2 பணிக்கூற்று :

"பொருத்தமான கொள்கைகள் மற்றும் உத்திகளை வடிவமைத்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், தொடர்புடைய பங்குதாரர்களுடன் தேவையான தலையீட்டின் மூலம் முதன்மைத் துறைகளுக்கு நிதியளித்தல்"

1.2.3 குறிக்கோள் :

"சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி மற்றும் நுண்கடன் துறைக்கு புத்துயிர் அளித்தல்."

1.3 பிரதான தொழிற்பாடுகள்

1.3.1 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

1.3.2 சந்தைத் தரவுகளை மீளாய்வு செய்து நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றின் வளர்**ச்சிக்கு** அவசியமான வினைத்திறனான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

1.3.3 பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கும், அரசினால் அமுல்படுத்தப்படும் மானியத் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கான வசதிகளை வழங்குதல்.

1.3.4 சந்தையின் கேள்விக்கேற்ப வங்கியியல், காப்புறுதி, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரிவு மற்றும் நிதித் துறைக்கான சட்ட உருவாக்கத்திற்கு தேவையான வசதிகளை உருவாக்குதல்.

1.3.5 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, வங்கித் துறை, நிதிச் சந்தை மற்றும் ஏனைய துறைகள் தொடர்பான அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறைக்கு வசதியளித்தல்.


1.3.6 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, முதன்மை துறை மற்றும் ஏனைய துறைகளுடன் தொடர்புடைய வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வெளிநாட்டு கடன் உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

1.3.7 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகள் தொடர்பான விவசாயம், தொழில்நுட்ப, மற்றும் சேவை பிரிவுகளில் சகல தரவுகளைத் தொகுத்தலும், அவற்றை ஆய்வு செய்து காணப்படும் தடைகளைக் கண்டறிந்து கொள்கையளவில் தலையிட்டுத் தீர்த்து வைத்தல்.

1.3.8 அரசாங்க அனுசரணையின் கீழ் அமுல்படுத்தப்படும் நிதி உதவித் திட்டங்களை மேற்பார்வை செய்தல்.

1.3.9 அரச கொள்கைகளுக்கிணங்க நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிதித் துறைகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கி நிதியுதவியை ஒழுங்குசெய்தல்.

நிறுவனக் கட்டமைப்பு



1.4 திணைக்களத்தின் பிரதான பிரிவு

1.4.1 நிதியியல் தீர்வு

1.4.2 சந்தை அணுகல் மற்றும் மேம்பாடு

1.4.3 நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவம்

1.5 திணைக்களத்தின் கீழ் வரும் நிதி உதவிகள்

ஏற்புடையதல்ல

1.6 வெளிநாட்டு நிதியுதவியின் கீழான கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள் (இருப்பின்)

கருத்திட்டத்தின் பெயர்	நன்கொடை நிறுவனம்	கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில்லியன்)	கருத்திட்டத்தின் காலஅளவு
சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர் கடன் கருத்திட்டம் (SMELoC)	ஆசிய அபிவிருத்தி வங்கி	69,623	2016-2024

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 மேன்நோக்கு

சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் துறையானது நாட்டின் வளர்ச்சியின் இயந்திரமாக இருப்பதால், சாத்தியமான நிதி தீர்வுகள் மற்றும் ஆதரவு பொறிமுறைகளை அளிப்பதன் ஊடாக சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதில் அரசாங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் உள்ளூர் நிதிகளைப் பயன்படுத்தி சலுகைக் கடன்கள் மற்றும் மானியங்களை வழங்குதல் போன்ற முன்முயற்சிகள் மூலம், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதி உதவிகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு அவற்றின் நிதி அணுகல் திறனை அதிகரிக்கவும் உதவுகிறது. மேலும், தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் மூலம் வழங்கப்படவுள்ள அரச ஆதரவு கடன் உத்தரவாதத் திட்டம், பிணைய சிக்கல்களில் சவால்களை எதிர்கொள்ளும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன் அணுகலுக்கான பாதுகாப்பை வழங்குகிறது. மேலும், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளை தொழில்நுட்பம் மற்றும் நிதி அறிவுத்திறனுடன் வலுவூட்டுவதற்காக பிரத்தியேக முகவர் மற்றும் நிறுவனங்கள் மூலம் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான ஆலோசனை சேவைகள், தொழில்நுட்ப உதவிகள், பயிற்சித்திட்டங்கள் மற்றும் வலையமைப்பு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், முறைசாரா நிதித் தயாரிப்புகளை செயல்படுத்துவதன் மூலம் உருவாக்கப்பட்ட நிதிச் சுரண்டலிலிருந்து முறைசாரா வணிகங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமூகங்களைப் பாதுகாக்கும் நோக்கில் நுண்நிதித்துறையில் தேவையான ஒழுங்குமுறை வழிமுறைகள் செயல்படுத்தப்படுகின்றன.

2.2 சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான தொடர் கடன் கருத்திட்டத்தின் (SMELOC) முன்னேற்றம்

2023 ஆம் ஆண்டில், ஆசிய அபிவிருத்தி வங்கியின நிதியுதவியின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடனசார்பு-தொடர் கருத்திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்டது. இது மொத்தமாக ரூ.8,895 மில்லியன் தொகையானது 917 சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கிடையில் ஆசிய அபவிருத்தி வங்கி தொடர் கடன் திட்டக் கூறின் கீழ் பதின்மூன்று பங்குபெறும் நிதி நிறுவனங்கள் மூலம் முதலீட்டுக் கடன்களாக பகிர்ந்தளிக்கப்பட்டது. குறிப்பாக, 420 பெண் தொழில்முனைவோருக்கு முதலீட்டுக் கடன்களுடன் இணைத்து ரூபா 429 மில்லியன் தொகை பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான நிதி முன்முயற்சி நன்கொடை We-Fi மானியமாக வழங்கப்பட்டது. சுமார் 1,520 சிறு தேயிலை தோட்ட உடமையாளர்களுக்கு ரூபா 2,406 மில்லியன் தொகை தேயிலை புதிய நடுகை, மீள் நடுகை, தானிய உள் நிரப்பல், நீர்ப்பாசனம், நாற்று மேடை மேம்பாடு மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றிற்காக வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை சுமார் 1058 சிறு தேயிலை தோட்ட உடமையாளர்களுக்கு புதிய தேயிலை நடுகை மற்றும் மீள் நடுகை நோக்கங்களுக்காக மாத்திரம் 156 மில்லியன் மதிப்புள்ள வறுமைக் குறைப்புக்கான ஜப்பான் நிதி (JFPR) மானியமாக வழங்கப்பட்டது. மேலும், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பொருளாதார மந்தநிலை காரணமாக வணிக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 895 நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு ரூபா 4,899 மில்லியன் மதிப்புள்ள தொழிற்படு மூலதனக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றைத் தவிர, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளை மேம்படுத்தும் நிதிக் கருத்திட்டத்தின் கீழ் ஐ.அ.டொ. 100 மில்லியன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புக்கொண்டுள்ளது, மேலும் அதிலிருந்து ஐ.அ.டொ. 50 மில்லியன் கடந்த சில ஆண்டுகளாக பொருளாதாரத்தில் ஏற்பட்ட திடீர் அதிர்ச்சிகளால் பாதிக்கப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு மேலும் ஆதரவளிக்க ஒதுக்கப்படும். இந்த திட்டத்தின் கடன் பேச்சுவார்த்தைகள் 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. மேலும் இலங்கை அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையிலான கடன் ஒப்பந்தம் மார்ச் 2024 இல் கைச்சாத்திடப்பட உள்ளது.

2.3 பண மாணியமாக உர மானியம் வழங்குதல்

நிலவும் கடினமான நிதிச் சூழலிலும், உர மானியத்தை தொடர்ந்து வழங்குவதன் மூலம் விவசாயத் துறையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. முந்தைய உர விநியோக செயல்முறையின் நிர்வாக மற்றும் கையாளுதல் திறமையின்மைகளைக் கருத்திற் கொண்டு, 2023 ஆம் ஆண்டு ஒரு ஹெக்டேயருக்கு சிறு போகத்திற்கான நிதி மானியமாக (பண மானியம்) ரூபா 20,000 மற்றும் 2023 /2024 பெரும் போகத்திற்கான நிதி மானியமாக ரூபா 15,000 என அதிகபட்சம் இரண்டு ஹெக்டேயர் நிலங்களை பயிரிடும் விவசாயிகளுக்கு முறையே பணம் செலுத்தும் கூப்பன்கள் மற்றும் விவசாயிகளின் வங்கிக் கணக்குகள் மூலம் வழங்கப்பட்டது. எனவே, இரசாயன உரம் அல்லது சூழல்நேயமிக்க உரம் அல்லது இரண்டையும் விவசாயிகளின் விருப்பப்படி கொள்வளவு செய்யலாம். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், 2022 ஆம் ஆண்டில் மியூரேட் பொட்டாஸ் (எம்ஓபி) இறக்குமதி செய்யப்பட்டதுடன் நிரப்புதல் செயல்முறைக்கு தேவையான மூலப்பொருளான மியூரேட் பொட்டாஸ் (எம்ஓபி) இன் பயன்பாட்டை உறுதி செய்வதற்காக சந்தை விலைக்கு இணையாக விலைகள் குறைக்கப்பட்டன.

2023 ஆம் ஆண்டிலும் மானிய விலையில் உரங்களை வழங்குவதற்கு ஏனைய களப்பயிர்கள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

2.4 நுண் நிதித் தொழில்துறைக்கான விரிவான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை நிறுவுதல்

2016 ஆம் ஆண்டின் நுண்நிதிச் சட்டம் இல.06 இலிருந்து நுண்நிதித் தொழில்துறைக்கான விரிவான ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால், நுண்நிதித் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்கு புதிய விரிவான சட்டக் கட்டமைப்பொன்று முன்மொழியப்பட்டது. இதன்படி, புதிய நுண்நிதி வரைவு மற்றும் கடன் ஒழுங்குமுறை அதிகார சட்டமூலம் 2023.10.09 ஆம் திகதியன்று அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு 2023.10.30 அன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. பின்னர் நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குமுறை அதிகார சட்டமூலம் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் முடிவுகளின் பிரகாரம், தீர்க்கப்பட்ட உண்மையான பிரச்சனையுடன் பங்குதாரர்களின் விடயங்களை மீள்பரிசியிலனை செய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது

2.5 உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

கோழிப்பண்ணை உற்பத்தி பொருட்களின் அதாவது கோழி மற்றும் முட்டைகள் உற்பத்திச் செலவனத்தில் கிட்டத்தட்ட 80 சதவீதம் கால்நடை தீவனத்திற்காகச் செலவிடப்படுகின்றன, மேலும் அந்த தீவனத் தேவையின் 50 சதவீதானது சோளத்தினால் பூர்த்தி செய்யப்படுகிறது. உள்ளூர் சந்தையில் சோளம் கிடைக்காததாலும், இறக்குமதி கட்டுப்பாடுகளாலும், குறிப்பாக பண்டிகை காலங்களில், 2023 ஆம் ஆண்டில், கோழி மற்றும் முட்டையின் விலை கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டது. சந்தையில் கோழி, முட்டை மற்றும் அது சார்ந்த பொருட்களின் மலிவு விலையை உறுதி செய்வதற்காக, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பரிந்துரையுடன் 200,000 மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது அத்துடன் 1 கிலோ சோளத்திற்கு ரூபா 25 விசேட பொருட்கள் வரியை (SCL) விதித்துள்ளது. அதன்படி 2023.12.31 வரை 187,000 மெட்ரிக் தொன் சோளம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

2.6 2022 /2023 பெரும் போகத்தில் அரச நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்குதல்

கடந்த பெரும் போகத்துடன் ஒப்பிடுகையில் 2022 / 2023 பெரும் போகத்தில் நெல் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாட்டினுடைய ஒரு மாதத்திற்கான அரிசியின் சராசரி நுகர்வு சுமார் 210,000 மெட்ரிக் தொன்களாக காணப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு, 2022 / 2023 பெரும் போகத்தில் எதிர்பார்த்த நெல் உற்பத்தியில் ஓரளவுக்கு அதிகமாக உற்பத்தி இருந்ததாக மதிப்பிடப்பட்டது. அதன்படி, நெல் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க, குறிப்பிட்ட அளவு நெல்லை கொள்முதல் செய்ய அரச தலையீடு தேவைப்பட்டது.

மேலும், முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசாங்க நெல் கொள்வனவுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களுக்கு மேலதிகமாக, சமூகத்தின் குறைந்த வருமானம் பெறும் பிரிவினரின் ஊட்டச்சத்து நிலையினை பேணுவதற்காக உதவிகளை வழங்குவதன் மூலம் நாட்டில் நிலவும் மிகவும் கடினமான பொருளாதார நிலைமையின் பாதகமான தாக்கங்களிலிருந்து அவர்களை பாதுகாப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. சமுர்த்தி பயனாளிகள், மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோய்கள் போன்ற நான்கு பிரிவினரைக் கொண்ட குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கு ஏப்ரல் 2023 வரை அவர்களின் அன்றாட தேவைகளுக்கு ஆதரவாக அரசாங்கம் மேலதிக பண மானியத்தை வழங்கிய போதிலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்த பிரிவினரை மேலும் கவனிக்க வேண்டிய ஒரு தேவை காணப்பட்டது.

இதன்படி, இனம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2 மாத காலத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரச நெல் கொள்வனவு மற்றும் அரிசி வழங்கும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலை உரிமையாளர்களின் பங்கேற்புடன் மாவட்டச் செயலாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிசிகழ்ச்சி திட்டத்தின் கீழ், 2023 ஜனவரி முதல் ஏப்ரல் வரை 20 மாவட்டங்களில் 442 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரமையாளர்கள் ஊடாக 100,895 மெட்ரிக் தொன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ என்ற அடிப்படையில் 25 மாவட்டங்களில் வசிக்கும் 2,757,851 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மொத்தம் 54,974 மெட்ரிக்தொன் அரிசி வழங்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் அளவு ரூபா 11,750 மில்லியன் ஆகும். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் திட்டம் நிறைவு பெற்றதும், சந்தையில் அரிசியின் நிரம்பலினை அதிகரிக்கரிப்பதற்காக மீதமுள்ள அரிசியை சந்தைக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

2.7 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலைகளுக்கு நெல் கொள்முதல் செய்ய உறுதிமொழிக் கடன் திட்டத்தை செயல்படுத்துதல்.

சமீப ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தினைப் போல், விவசாயிகளின் நெல் அறுவடைக்கு நியாயமான விலையை வழங்கும் அதே வேளையில், நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலைகள் விலைமதிப்பற்ற பங்கினை ஆற்றியுள்ளன. இருப்பினும், பொருந்தக்கூடிய சந்தை வட்டி வீதத்தின் கீழ் காணப்பட்ட குறைந்த அளவிலான நிதி அணுகலானது இந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலைகள் தொடர்ச்சியாக எதிர்கொண்ட முக்கிய சவால்களில் ஒன்றாக இனம் காணப்பட்டது. எனவே, 2023 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் நெல் கொள்வனவு செய்யக்கூடியவாறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலைகளுக்கு அரச வங்கிகள் மூலம் சலுகை வட்டி விகிதத்தில் உறுதிமொழிக் கடன் வசதியை வழங்க அரசாங்கம் தீர்மானித்தது.

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி வழங்கிய உறுதிமொழிக் கடன்களின் மதிப்பு முறையே ரூபா 151.5 மில்லியன் மற்றும் ரூபா 433.5 மில்லியன் ஆகும். அதன்படி, 2023 சிறு போகத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலைகளுக்கு மொத்தமாக ரூபா 585 மில்லியன் பெறுமதியான உறுதிமொழிக் கடன்கள் வழங்கப்பட்டன.

மேலும், உறுதிமொழிக் கடன் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு 16 சதவீத வட்டி வட்டி வீதத்தில், ஆண்டுக்கு 4 சதவீத வட்டி வட்டி வீதத்தினை அந்தந்த வங்கிகளுக்கு வட்டி மானியமாக பொது திறைசேரியினால் செலுத்தப்பட்டது. இதன்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல்ஆலைகளால் ஆண்டுக்கு 12 சதவீத வட்டி மட்டுமே செலுத்தப்பட்டு வந்தது. வருடத்தில் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு செலுத்தப்பட்ட மொத்த வட்டி மானியம் முறையே ரூபா 115,546.56 மற்றும் ரூபா 1,009,326.04 ஆகும்.

2.8 ஐக்கிய அமெரிக்க டொலர் 1,000 மில்லியன் இந்தியக் கடன் திட்டம்

2023 மார்ச் 16 வரை இந்தியாவில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக ஐ.அ.டொ. 1000 மில்லியன் கடனைப் பெறுவதற்காக 2022 மார்ச் 17 அன்று இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரச வங்கிக்கும் இடையே 2022 மார்ச் 05 ஆம் திகதியன்று நடைபெற்ற அமைச்சர்களின் கூட்டத்தில் வழங்கப்பட்ட அமைச்சரவையின் ஒப்புதலின் கீழ் கடன் வசதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையின் நோக்கமானது வங்கி அமைப்பு மற்றும் சந்தையில் நிலவிய வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு காரணமாக உணவுகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நாணய கடிதங்களை திறப்பதில் சிரமங்களை எதிர்கொண்ட இலங்கை இறக்குமதியாளர்களுக்கு வசதி செய்வதாகும். அப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த உதவும் காரணிகளை ஆராய்ந்து, கைத்தொழில்துறை மூலப்பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துகள் ஆகிய மூன்று துறைகளுக்கு இக்கடன் வரி ஒதுக்கப்பட்டதோடு, பின்னர் எரிபொருள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஐ.அ.டொ. 200 மில்லியன் எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக ஒதுக்கப்பட்டது.

இதில் பயன்படுத்தப்படாத தொகை மற்றும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட அதிக தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, 2023 ஜூன் 07 அன்று நீடிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது, மீதமுள்ள நிதியைப் பயன்படுத்துவதற்கான காலக்கெடுவை 2024 மார்ச் 16 வரை நீடிப்பதற்கு இந்திய அரச வங்கி ஒப்புக்கொண்டது. பயன்பாடு, இரத்து செய்தல் மற்றும் நிராகரிப்புகள் மேலும் துறைசார் தேவைகள் நோக்கில், இறுதி ஒதுக்கீடானது பின்வருமாறு திருத்தப்பட்டது. அத்தியாவசிய பொருட்கள் (ஐ.அ.டொ 100 மில்லியன்), மருந்துகள் (அ.டொ 360 மில்லியன்),கைத்தொழில்துறை மூலப்பொருட்கள் (ஐ.அ.டொ 70 மில்லியன்), எரிபொருள் ஐ.அ.டொ 200 மில்லியன் மற்றும் ஒதுக்கப்படாத தொகையை எதிர்கால தேவைகளின் அடிப்படையில் பயன்படுத்த அனுமதித்தது.

அதன்படி, 2023 டிசம்பர் 31, நிலவரப்படி, இந்திய தொடர் கடனைப் பயன்படுத்தி நாட்டிற்கு ஐ.அ.டொ. 450 மில்லியன் டொலர் மதிப்புள்ள பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன, மேலும் அதில் ஐ.அ.டொ. 434 மில்லியன் ஏற்றுமதியாளர்களின் பணம் செலுத்துவதற்கு HCI க்கு வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், மருந்து பொருட்கள் மற்றும் மருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய இந்த கடன் வசதி முக்கியமாக பயன்படுத்தப்பட்டது. 2023 டிசம்பர் 31 அன்று ஒவ்வொரு துறையின் முன்னேற்றத்தின் சுருக்கம் பின்வருமாறு.

2023 டிசம்பர் 31 அன்று சுருக்கம்

(ஐ.அ.டொ. மில்)

வகுதி	மொத்த ஒதுக்கீடு	அனுமதிக்காக எச்.சி.ஐ இற்கு அனுப்பப் பட்டது	நிராகரிப்பு /இரத்து	இறுதியாக அனுமதிக் கப்பட்ட பெறுமதி	பெற்றுக் கொள்ளப் பட்ட பொருட்கள்	வழங்கப் பட்ட கொடுப்பனவு அங்கீகாரம்	பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களிலிருந்து வழங்கப்பட்ட கொடுப்பனவு அங்கீகாரத்தின் சதவீதம்
மூலப்பொருட்கள்	70	136	62	49	44	43	99.0
மருந்துப் பொருட்கள்	360	228	34	180	128	113	88.0
அத்தியாவசியப் பொருட்கள்	100	298	150	91	78	78	99.9
எரிபொருள்	200	200		200	200	200	100.0
எல்பிகேஸ்		17		-			
ஒதுக்கப்படாதது	270						
மொத்தம்	**1,000**	**879**	**246**	**520**	**450**	**434**	**96.8**

மூலம்: இந்திய கடன் ஒருங்கிணைப்பு பிரிவு

2.9 தேசிய கடன் உத்தரவாத நிறுவனம்

தேசிய கடன் உத்தரவாத நிறுவனமானது, நாட்டிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை தொடர்பில் துரிதமாக மாறிவரும் சந்தைக் கேள்விகள், மாறிவரும் தொழில்நுட்பம் ஆகிவற்றிற்கேற்ப மாற்றமடைய இயலாமை மற்றும் குறைந்தளவிலான நிதி உள்ளடக்கம் காரணமாக ஏற்பட்ட திறன்வரம்புகள், நிதிக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் குறிப்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணைகளின்மை ஆகிய தடைளைகளை எதிர் கொண்டு அத்துறைக்கு ஆதரவளிப்பதனை நோக்காகக் கொண்டு, பி.பீ 00271461 என்ற பதிவு இலக்கத்தின் கீழ் ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அத்துறை தொடர்பாக. 13 பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் - (10 உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் 3 உரிமம் பெற்ற வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்) ஆரம்ப பங்குதாரர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கான முழு பணிப்பாளர்கள் சபை பெயரிடப்பட்டுள்ளதோடு இலங்கை அரசாங்கத்திற்கும், வருங்கால நிதி நிறுவனங்களுக்கும் இடையில் பங்குதாரர் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது தேசிய கடன் உத்தரவாத நிறுவனத்திற்கு ஆரம்ப மூலதனத்தை செலுத்துவதற்காக ஐ.அ.டொ. 50 மில்லியன் தொகையினை இலங்கை அரசுக்கு வழங்கும். மேலும் இந்த பிபிபி மாதிரியானது நிறுவனத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்யும். நிறுவனத்தின் செயல்திறன் அளவுகோல்களினது இணக்கப்பாட்டுக்கு அமைய, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆரம்பக் கடனைப் பயன்படுத்திய பின்னர் 2026 ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் இறுதி மூலதன உட்செலுத்தலாக ஐக்கிய அமெரிக்க டொலர் 50 மில்லியன் தொகையினை மேலதிக கடனாக கருத்தில் எடுத்தல் வேண்டும். 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் கடன் உத்தரவாத வெளியீடு தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பம்.˙.
மலர்மதி கங்காதரன்
பணிப்பாளர் நாயகம்

அத்தியாயம் 03 – 2023.12.31ஆம் ஆண்டுக்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகைக் கூற்று

ரூபாய் மில்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

நிருத்தப்பட்ட ஐ.செ. நிதி ஏதுக்கீடுகள் 2022 ரூபா		குறிப்பு	உண்மையான 2023 ரூபா	உண்மையான 2022 ரூபா	
	வருமானம் பெறுகைகள்				
	வருமான வரி	1	-	-	ரசீது-1
	உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
	வரியல்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
	நிறைச்சேரி பணி முற்பணங்கள்		19,532,080,946	20,277,341,570	ரசீது-3
	வைப்புக்கள்		35,935,400,141	52,476,765,810	ரசீது-4
	முற்பணக் கணக்குகள்		3,537,761	3,007,786	ரசீது-5
	ஏனைய பிறதான பேரேட்டுக் கணக்கின் பொறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		55,471,018,847	72,757,115,166	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		55,471,018,847	72,757,115,166	
	நிறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		35,935,236,311	52,476,626,035	
-	நிதிய வருமானம் மிகைப்பணம் மற்றும் வருமானம் அல்லாத மிகைப்பணம் உ = (இ)-(ஈ)		19,535,782,536	20,280,489,131	
	கழி : செலவினம்				
	மீண்டுவரும் செலவினம்				
	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	50,306,065	48,003,735	
54,900,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	13,680,219	12,344,889	ரசீது-2(ii)
20,060,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	20,225,487,607	20,272,915,111	
21,366,330,000	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
21,441,290,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		20,289,473,890	20,333,263,734	
	மூலதன செலவினம்				
600,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், பேணுகையும்	10	324,050	267,000	
10,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	628,730	2,361,040	
2,220,000,000	மூலதன மாற்றல்கள்	12	1,836,221,742	942,626,347	ரசீது-2(ii)
63,802,000,000	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	11,051,791,115	11,354,796,347	
300,000	நிதிய மீளாத்தி	14	242,050	81,926	
9,300,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	943,105	6,559,086	
66,042,200,000	மொத்த மூலதன செலவினம் (எ)		12,890,150,791	12,306,691,746	
	வைப்புக் கொடுப்பனவுகள்		46,956,502,599	36,218,057,375	ரசீது-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		3,193,725	2,238,788	ரசீது-5
	ஏனைய பிறதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்த பிறதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		46,959,696,323	36,220,296,163	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		80,139,321,005	68,860,251,643	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(60,603,538,469)	(48,579,762,512)	
	பணி முற்பண சரிப்படுத்தல் அதிகக்கையின்படி மீதி		(60,603,538,469)	(48,579,762,512)	ரசீது-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ரசீது-3
			(60,603,538,469)	(48,579,762,512)	

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ- பீ

2023 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு
நிதி நிலைமை அறிக்கை

	குறிப்பு	உண்மையான 2023 ரூபா	2022 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசிஏ-6	1,765,928,144	1,715,350,080
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசிஏ-5/5(அ)	6,544,343	6,888,379
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசிஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		1,772,472,487	1,722,238,459
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(5,231,384,516)	(16,252,142,938)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		1,765,928,144	1,715,350,080
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசிஏ-5(ஆ)		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசிஏ-4	5,237,928,859	16,259,031,317
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசிஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		1,772,472,487	1,722,238,459

பக்க இலக்கம் 06 முதல் 27 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் / பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 28 முதல் 30 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: கே.எம்.எம்.சிறிவர்தன
பதவி : செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சு
திகதி : 22/12/2023

K.M.M. Siriwardana
Secretary to the Treasury and
Secretary to the Ministry of Finance,
Economic Stabilization and National Policies
The Secretariat
Colombo 01.

கணக்கீட்டு அலுவலர்
பெயர்: மலர்மதி கங்காதரன்
பதவி: பணிப்பாளர் நாயகம்
திகதி: 22/12/2023

பணிப்பாளர் நாயகம்
அபிவிருத்தி நிதித் திணைக்களம்
பொது திறைசேரி
கொழும்பு 01.

பிரதான நிதி அலுவலர்/ பிரதான கணக்காளர்/
பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி)
பெயர்:டபிள்யு.பி.பீ.எஸ். அபேவர்தன

W.P.B.S. Abeywardana
Deputy Director (Finance)
Department of Development Finance
Ministry of Finance
Colombo 01

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

உண்மை

	2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	2,958,041	6,440,483
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	19,532,080,946	20,277,341,570
முற்பணங்களை அறவிடல்	2,648,302	2,400,749
வைப்புக்களின் பெறுகை	35,935,400,141	52,476,765,810
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**55,473,087,430**	**72,762,948,612**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	63,531,684	60,815,750
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	19,161,323,008	20,215,046,597
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	35,935,236,311	52,476,626,035
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	1,707,136	2,028,668
முற்பணக் கொடுப்பனவு	251,525,618	348,807
வைப்புக் கொடுப்பனவு	55,413,323,757	72,754,865,857
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)		
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**59,763,673**	**8,082,755**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதிக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த கர்சு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
மூலதனச் செலவினம்	59,763,673	8,082,755
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**59,763,673**	**8,082,755**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(59,763,673)**	**(8,082,755)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

3.4.1 அறிக்கையிடலின் அடிப்படை

1. அறிக்கையிடப்படும் காலப்பகுதி

2023 ஜனவரி மாதம் 01ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியானது, இந்நிதிக் கூற்று தொடர்பாக அறிக்கையிடப்படும் காலப்பகுதியாகும்.

2. அளவீட்டின் அடிப்படைகள்

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்படாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிற்கு கிட்டிய ரூபாவில் முன் வைக்கப்பட்டுள்ளது.

3. வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4. சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5. சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரண கணகுளுடன் தொடர்புபட்டதாகும்.

6. காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூபா,000

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் வருமான மதிப்பீடு (%)	இறுதி வருமான மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு (%)
பொருத்தமற்றது					

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு உண்மையான செலவினம்		இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு	ஒதுக்கீடு உண்மையான செலவினம்
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	21,441,290,000	21,441,290,000	20,289,473,890	95
மூலதனம்	66,042,200,000	66,042,200,000	12,890,150,791	20

3.7. நி.பி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக மாவட்ட செயலக செலவினத்திற்கான ஒதுகீடு

ரூபா,000

தொடர் இலக்கம்	அமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
	பொருத்தமற்றது					

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை.

ரூபா,000

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2023.12.31 ஆம் திகதிய சுற்றாய்வு அறிக்கைப் படி மீதி	2023.12.31 ஆம் திகதிய நிதி நிலைமை அறிக்கைப்படி மீதி	ஏதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	ஆறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	5,059,600	5,059,600		
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	91,389,331	91,389,331		
9153	காணி				
9154	அருவமான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்	1,669,479,213	1,669,479,213		
9180	குத்தகை சொத்துக்கள்		-		

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் சிங்கள பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறியீட்டுச் சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	**75% - 89%**	**50% - 74%**
சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான கடன் நிகழ்ச்சித் திட்டம்		84%	---
பெண் தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்ட கடன்கள	---	84%	---
சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் வரிசை	---	78%	---
வறுமை ஒழிப்புக்கான ஜப்பானிய நிதியத்தின் நன்கொடைகூறு	---	84%	---
அவசர கால எதிர்வினைக்கூறு	100%	---	---
சிறிய நடுத்தர நெல் ஆலைகள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்	100%	---	---
குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகம்	100%	---	---

அத்தியாயம 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

5.1 மேன்நோக்கு

பேண்தகு அபிவிருத்தியின் அடிப்படைக் குறிக்கோள் என்பது ஒரு நாட்டின் இயற்கை வளங்களை நிகழ்காலத்தில் திறம்பட நிர்வகிப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து வைப்பதாகும். இதன் அடிப்டையில், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது 2015 ஆம் ஆண்டில் 17 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை ஆரம்பித்து வைத்தது, அவை 2030 ஆம் ஆண்டளவில் 193 உறுப்பு நாடுகளால் நிறைவு செய்யப்பட வேண்டுமென்பதோடு இவை 17 துறைகளை உள்ளடக்கியுள்ளது. எனவே, மனித, சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் கூறுகளின் அடிப்படைத் தூண்களை ஒன்றாக இணைப்பதன் மூலம், சுற்றுச்சூழல் பேண்தகுத்தன்மை, சமூக பேண்தகுத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி மூலம் பேண்தகு அபிவிருத்தியினை நோக்கி பொருளாதாரங்களை வழிநடத்துவதே இதன் குறிக்கோளாகும். அரச துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து, 2030 ஆம் ஆண்டளவில் பேண்தகு அபிவிருத்தியின் இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

